1.12.2025 O.S. 327/2019 .வா.சா.1 வெள்ளப்பாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1ம் பிரதிவாதியின் ராமராசுவின் அப்பா பெயர் என்னவென்றால் வெள்ளப்பாண்டியன் ஆகும். வெள்ளப்பாண்டியன் அப்பா பெயர் சுப்பையா பாண்டியன் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் அப்பா ராமு அம்மாள் என்பவருக்கு சொத்தை கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுத்து விட்ட பிறகும் 1ம் பிரதிவாதியின் அப்பா பெயர் பட்டாவில் தவறுதலாக ஏற்பட்டு விட்டது என்றால் சரிதான். அவ்வாறு தவறாக ஏற்படுத்தப்பட்ட பட்டாவின் அடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் எழுதிகொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். 5 முதல் 10 பிரதிவாதிகளும் ராமராசுவின் பெரியப்பா, சித்தப்பாவிடம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 5 முதல் 10 பிரதிவாதிகள் என் அனுபவத்தை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் 5 முதல் 10 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.